முதல்வர் மு.க.ஸ்டாலினின் அணுகுமுறை

# கலைஞரை நினைவூட்டியது!

மூத்த பத்திரிகையாளர் பா.கி.நெகிழ்ச்சி!



**சென்னை, செப். 5-**

**'முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அணுகுமுறை கலைஞர் அவர்களையே எனக்கு நினைவூட்டியது' என்று மூத்த பத்திரிகையாளர் பா.கி.நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-

தி.மு.க. அரசியலை விமர்சித்து வந்தாலும், கலைஞரின் இதழியல், இலக்கிய முகத்தைப் பெரிதும் ரசிக்கும் நான் அவரைப் பற்றி எழுதிய கட்டுரை நேற்றைய 'முரசொலி' இதழில் பிரசுரமாகியிருந்தது. என் எழுத்தைக் கொஞ்சம் கூட மாற்றாமல், குறைக்காமல் பிரசுரித்திருந்தார்கள். மேலும், கட்டுரையை திரு.முரசொலி செல்வம் பாராட்டினார். அதை விட வியப்பானது, இரவு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கைபேசியில் அழைத்துக் கட்டுரை குறித்துப் பாராட்டினார். டி.வி. விவாதங்களில் நான் பங்கேற்பதைப் பார்ப்பதாகக் குறிப்பிட்டார். நான், "தி.மு.க. அரசை ஆக்கபூர்வமாகவே விமர்சிப்பேன். அரசியல் நோக்கமில்லை" என்றேன்." தெரியும். அப்படிப் பேசுவதைக் கவனித்து வருகிறேன்" என்று மனம் திறந்து பேசினார். நெகிழ்வாகஇருந்தது. திரு.மு.க.ஸ்டாலினைக் கூடத் தனிப்பட்ட முறையில் விமர்சிக்காமல் கருத்தியல், அணுகுமுறையை மட்டுமே விமர்சிக்கிறேன், இனியும் தொடர்வேன், அவருடன் உரையாடியது கலைஞரை நினைவூட்டியது. அவரும் இதழ்களைப் படித்துவிட்டு தொலைபேசியில் அழைத்துப் பேசுவார். திரு.ஸ்டாலினிடம் அந்த அணுகுமுறை என்னைக் கவர்ந்தது. மற்றவர்களிடம் அதைப் பார்க்க முடியவில்லை. அவ்வளவே....



இவ்வாறு பா.கி. தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்ட

# சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் ஜெ.எஸ்.ஆர்.ஜெகன்ராஜ் அறிவிப்பு!

*சென்னை, செப். 5-*

*சென்னை தென்மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் கூட்டம் இன்று நடைபெறுகிறது.*

*இது குறித்து மாவட்ட அமைப்பாளர் ஜெ.எஸ்.ஆர்.ஜெகன்ராஜ் அறிவிப்பு வருமாறு:*

*சென்னை தென்மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி தியாகராயர் நகர் சட்ட மன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் ஜெ.எஸ்.ஆர்.ஜெகன்ராஜ் எனது தலைமையில் இன்று (05.09.2023) மாலை 6 மணி அளவில் நெ.1, விநாயகம் தெரு, மேற்கு மாம்பலம் அலுவலகத்தில் நடைபெறுகிறது.*

*எனவே இக்கூட்டத்தில் மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது*

*பொருள்: முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட தலைவர் துணைத்தலைவர் அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் பகுதி அமைப்பாளர்கள் கூட்டம் 07-09-2023 வியாழக் கிழமை அன்று சென்னை இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெறுவதை தொடர்ந்து ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

# 'வாட்ஸ் அப்'பில் வலம் வரும் செய்தி!




# சென்னை மாகாண முன்னாள் முதல்வர் டாக்டர் ப.சுப்பராயன் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

சென்னை, செப். 5-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் இன்று (05.09.2023) காலை 10.15 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் 152வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்.

டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் திருச்செங்கோடு அருகே உள்ள குமார மங்கலம் கிராமத்தில் ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்தார். இவர் வாழ்நாளில் சென்னை மாகாணத்தின் உள்ளாட்சித் துறை அமைச்சர், கல்வி மற்றும் சட்ட அமைச்சர், உள்துறை அமைச்சர், சட்டமன்ற மேலவை உறுப்பினர். இந்தோனேசியாவிற்கான இந்தியத் தூதுவர், இந்திய நாடாளுமன்ற கீழவை உறுப்பினர், மேலவை உறுப்பினர், மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர், மகாராஷ்டிர மாநில ஆளுநர் போன்ற எண்ணற்ற பதவிகளை வகித்து, நல்ல திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கினார். மேலும், சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பதவி வகித்தார். இவரது ஆட்சிக் காலத்தில், முதல்முறையாக அரசாங்க பணிகளில் தலித்துக்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர்களுக்கும் வகுப்புவாரி பிரநிதித்துவ அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

வ.உ.சி. சிலைக்கு மாலை

செக்கிழுத்த தியாகச் செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உலகநாதன் பிள்ளை பரமாயி அம்மையார் தம்பதியருக்கு 05.09.1872ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். அடிப்படைக் கல்வியை ஒட்டப்பிடாரத்திலும், உயர் நிலைக் கல்விப் படிப்பை தூத்துக்குடியிலும், சட்டக் கல்வியை திருச்சி யிலும் பயின்று 1894 ஆம் ஆண்டு வழக்கறிஞர் ஆனார். மேலும், சமூக சேவையிலும் அரசியல் பணியிலும் படிப்படியாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் வ.உ.சிதம்பரனார் அவர்கள்.

தாய் நாட்டின் விடுதலைக்காகத் தமிழகத்திலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானவர் வ.உ.சிதம்பர னார். அரசியல் வாழ்க்கையில் பாலகங்காதர திலகரைத் தனது குருவாக ஏற்றுக் கொண்டு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை. அடியோடு ஒழித்திட அரசியல் ரீதியாகவும், வணிக ரீதியாகவும் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இதனாலேயே கப்பலோட்டிய தமிழன் என்று பெயர் பெற்றார்.

வ.உசிதம்பரனாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த ஆங்கிலேயர்கள், அரசாங்கத்தை அவமதித்ததாகவும், சுதந்திரத்திற்காக பொது மக்களைத் தூண்டியதாகவும் இவர் மீது வழக்கு பதிவு செய்து, இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதன் காரணமாக 1908ஆம் ஆண்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டு செக்கிழுக்க வைக்கப்பட்டார்.

தமிழக மக்களால் பெரிதும் போற்றப்படும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பல்வேறு இன்னல்களுக்கு இடையிலும், தாய் மொழி தமிழ்மொழி மீது கொண்டிருந்த தணியாத தாகத்தின் காரணமாக பல அரிய நூல்களையும், சுயசரிதையையும் கவிதை வடிவில் எழுதியுள்ளார். தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில், 1975 முதல் 1976 வரை தூத்துக்குடியில் கட்டிமுடிக்கப்பட்ட 4 கப்பல் தளங்களுக்கு செக்கிழுத்த செம்மல் வ.உ.சி அவர்களின் பெயர் சூட்டப் பட்டது. 1998ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பர னார் எழுதிய 16 நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில், அன்னாரின் 150வது பிறந்த நாளில் முத்தான 14 அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

நம் தேசத்தின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்தும் அயராது பாடுபட்டும். தாய் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில் என்றும் நிறைந்துள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சிகளில், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு - சங் பரிவாரத்தினரின் விஷமப் பிரச்சாரத்தை இந்திய மக்கள் முறியடிப்பார்கள்!

# மதச்சார்பற்ற அரசியலை உயர்த்திப் பிடித்து - பா.ஜ.க.வின் அழிவுச் சிந்தாந்தம் முறியடிப்போம்!

## மார்க்சிஸ்ட் கம்யூ. மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கண்டன அறிக்கை!

*சென்னை,செப்.5-*

*அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதை திரித்துக் கூறுவதா? என ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க. பரிவாரத்தின் விஷமப் பிரச்சாரத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருண்ணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக கே. பாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:*

*"தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் சென்னையில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்று மாநில அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை வழங்கும் போது பேசிய கருத்துகளைத் திரித்தும் சிதைத்தும் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. பரிவாரம் விஷமப் பிரச்சாரம் செய்து வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா, நிர்மலா சீதாராமன் துவங்கி பா.ஜ.க.வின் நட்டா, அண்ணாமலை வரை ஒரே குரலில் பொய்யுரைக்கின்றனர். பொய் புகார்களையும் இந்துத்துவா அமைப்பினர் பல்வேறு மாநிலங்களில் கொடுத்து வருகின்றனர்.*



### மதத்தின் பெயரால் இழைக்கப்பட்ட கொடுமைகள்!

*இந்த மாநாடு இந்து மதத்திற்கு எதிராக நடத்தப்படவில்லை. மாறாக, சனாதனம், மநு நீதி, வர்ணாசிரமம் என்ற பெயரில் காலம் காலமாக திணிக்கப்படும் சாதிய மேலாதிக்கம், பெண்ணடிமைத் தனம், மூடநம்பிக்கை போன்றவற்றை எதிர்த்தே நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் பகுத்தறிவாளர்கள் மட்டுமல்ல; ஆன்மிகத்தில் நம்பிக்கை கொண்டவர்களும் பங்கேற்று உரையாற்றியுள்ளனர். சனாதனக் கருத்தியல் எவ்வாறு இறை நம்பிக்கை கொண்ட மக்களையும் பிரித்து வைத்து மேலாதிக்கம் செய்கிறது என்று அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். கர்நாடக மாநிலம், தேவதாசி முறை ஒழிப்பு சங்கத்தைச் சேர்ந்த தலைவரும் இந்த மாநாட்டில் பங்கேற்று மதத்தின் பெயரால் பெண்களுக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளை எடுத்துரைத்துள்ளார்.*

*சனாதனக் கருத்தியலுக்கு எதிரான கருத்தியல் போர் என்பது கௌதம புத்தர் துவங்கி, சித்தர்கள், ராமானுஜர், வள்ளலார், நாராயண குரு, வைகுண்ட சாமிகள், அய்யன்காளி, பசவண்ணா, ஜோதிபா பூலே என காலம் காலமாக நடந்தே வந்துள்ளது. நம்முடைய அரசியல் சாசனம் இந்திய மக்கள் அனைவரும் சமமானவர்கள் என்றும் பிறப்பால் ஏற்றத்தாழ்வு இல்லை என்றும் உறுதியாக பிரகடனம் செய்கிறது. இந்திய அரசியல் சாசனத்தின் பெயரால் பதவியேற்றுக் கொண்டுள்ள அமித்ஷா, நிர்மலா சீதாராமன் போன்றவர்கள் சமத்துவத்துக்கு எதிரான கருத்தியலுக்கு ஆதரவளிப்பது அரசியல் சட்டத்திற்கு முரணானது ஆகும்.*

### குலக்கல்வித் திட்டம் கொண்டு வர முயற்சி!

*இந்த மாநாட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசும் போது, மக்களை சாதி ரீதியாகப் பிரித்து தனித்தனியாக இருக்க வேண்டும் என்று சொன்னதுதான் சனாதனம் என்றும், மணிப்பூர் மாநிலத்தில் சொந்த மக்களை இரண்டு குழுக்களாக பிரித்து கலவரத்தை மூட்டிவிட்டுள்ளனர் இதுதான் சனாதனம் என்றும் விஸ்வகர்மா திட்டத்தை ஒன்றிய அரசு கொண்டுவருவதில் ஒரு சதி உள்ளது. குலக் கல்வித் திட்டத்தை மீண்டும் கொண்டுவரும் முயற்சி இது என்றும் பேசியுள்ளார்.*

*பாசிஸ்ட்டுகள் நம்முடைய குழந்தைகளைப் படிக்கவிடாமல் செய்ய என்ன வழி என்று யோசித்து அதற்காகத்தான் இந்தத் திட்டத்தை கொண்டு வருகின்றனர் என்றும் நாம் படித்துவிடக்கூடாது என்பதுதான் சனாதனக் கொள்கை என்றும் பேசியுள்ளார். ஆனால், கிறிஸ்தவ, இஸ்லாமிய, சிறுபான்மையினரையும், பட்டியலின பழங்குடி மக்களையும் மதத்தின் பெயராலும் சாதியின் பெயராலும் இனப்படுகொலை செய்யும் ஒரு கூட்டம் இந்துக்களை இனப் படுகொலை செய்ய அமைச்சர் தூண்டிவிடுவதாக பொய்யைப் பரப்புகின்றனர்.*

*மனு தர்ம ஆட்சியை மீண்டும் கொண்டுவரத் துடிக்கும் சங்பரிவாரத்தினர் மக்களைப் பிளவுபடுத்தி தங்களது வாக்கு வங்கி அரசியலுக்குப் பயன்படுத்துகின்றனர் என்பதற்கு ஏராளமான சாட்சியங்கள் உள்ளன. நரேந்திர மோடி தலைமையிலான கடந்த பத்தாண்டு கால ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்குலைவு நடவடிக்கைகளால் இந்துக்கள் உட்பட அனைத்து இந்திய மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட் கள் விலை உயர்வாலும், பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி. வரி போன்ற நடவடிக்கைகளாலும் அனைத்துப் பகுதி மக்களையும் தண்டித்துள்ளது ஒன்றிய அரசு. நிலவுடமையைப் பாதுகாக்கவும், மன்னராட்சி முறையை நியாயப் படுத்தவும் உருவாக்கப் பட்ட சனாதனம் உள்ளிட்ட பிற்போக்குத் தத்துவங்களை இன்றைக்கும் பயன் படுத்தி கார்ப்பரேட் முதலாளிகளின் கொள்ளைக்கும், சுரண்டலுக்கும் துணை நிற்கிறது ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. பரிவாரம்.*

### பொய்ப் பிரச்சாரம்!

*ஊழல், விலைவாசி உயர்வு, வேலையின்மை போன்ற பிரச்சனைகளில் சிக்கித் திணறி தோல்வி பயத்தில் உள்ள பா.ஜ.க. இந்திய மக்களை திசைதிருப்புவதற்காக தன்னுடைய வழக்கமான பொய்ப் பிரச்சாரத்தை மீண்டும் துவக்கியுள்ளது. தாம் எந்தவொரு மதத்திற்கும் எதிராகவும் பேசவில்லை. நான் அனைத்து மக்களுக்கும் பொதுவானவர் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெளிவுபடுத்திய பிறகும் மாநாட்டில் பேசாத ஒன்றைத் திரித்து பா.ஜ.க.வினர் மேற்கொள்ளும் பொய்ப்பிரச்சாரம் தோல்வியடையும் என்பது உறுதி.*

*பா.ஜ.க.வுக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள இந்தியா கூட்டணியின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஆத்திரத்தில் சங்பரிவாரத்தினர் மேற்கொள்ளும் விஷமப் பிரச்சாரத்தை இந்திய மக்கள் நிராகரிப்பார்கள். மதச்சார்பற்ற அரசியலை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் பா.ஜ.க.வினரின் அழிவுச் சித்தாந்தத்தை முறியடிப் போம்.*

*இவ்வாறு கே.பாலகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.*

ஒரே நாடு - ஒரே அதிபர் என கூறிக்கொண்டு

# ஒட்டுமொத்த இந்தியாவையும் மோடி வாரிச் சுருட்ட நினைக்கிறார்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் எச்சரிக்கை!

*சென்னை, செப். 5-*

*ஒரே நாடு, ஒரே தேர்தல் - ஒரே அதிபர் ஒரே கட்சி என்று கூறிக்கொண்டு மோடி ஒட்டு மொத்த இந்தியாவையும் வாரி சுருட்ட நினைக்கின்றார் என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் மக்களுக்கு எச்சரிக்கை மணி அடித்துள்ளது.*

*அது வருமாறு:-*

*நாடு முழுவதும் ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கான விவாதங்களை மீண்டும் ஒன்றிய பா.ஜ. அரசு கிளப்பி விட்டுள்ளது. தேர்தலில் அளித்த வாக்குறுதிக் கேற்ப, நாடு முழுவதும் ஒரே சமயத்தில் லோக்சபா மற்றும் சட்டசபை தேர்தல்களை நடத்திட பா.ஜ. அரசு முடிவு செய்து, அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது. பொதுவாக ஆளும்கட்சியானது அமைக்கும் குழுக்கள், அவர்கள் மனவோட்டத்தை சித்தரிக்கும் கைப்பாவையாகவே இருக்கும். இக்குழுவிலும் பெயரளவிற்கு காங்கிரஸ் எம்.பி. ஆதிர் ரஞ்சன் சவுத்ரியை நியமித்து விட்டு, மற்றபடி தங்களுக்கு சாதகமான நபர்களை பா.ஜ. நியமித்துள்ளது.*

*இக்குழுவில் நாடாளுமன்றத்தில் 3வது இடத்தில் உள்ள தி.மு.க.விற்கு பிரதிநிதிகள் இல்லை. தலையாட்டி பொம்மைகளை வைத்துக் கொண்டு தாங்கள் நினைத்ததை சாதித்து விடலாம் என ஒன்றிய பா.ஜ. அரசு எண்ணுகிறது. இக்குழுவின் தலைவராக இருப்பவர் முன்னாள் ஜனாதிபதியாகும். ஜனாதிபதிகள், கவர்னர்கள் எல்லோருக்கும் பொதுவானவர்கள் என்ற கருத்தியலை பா.ஜ. எப்போதோ சுக்கு நூறாக உடைத்து விட்டது. இக்குழுவில் ராஜ்யசபாவின் எதிர்க்கட்சி தலைவராக உள்ள மல்லிகார்ஜுன கார்கேவுக்கு கூட இடமில்லை. நாடாளுமன்ற ஜனநாயக முறைகளை இழிவுப்படுத்தும் வகையில் அவரையும் புறம் தள்ளிவிட்டனர். அப்படியென்றால் இக்குழு என்ன அறிக்கை அளிக்கும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்து விடலாம்.*

*இந்நிலையில் ஒன்றிய அரசின் ஊதுகுழல் குழுவில் நீடிக்க தனக்கு விருப்பம் இல்லை எனக் கூறி காங்கிரஸ் எம்.பி. ஆதிர் ரஞ்சன் சவுத்ரி விலகிவிட்டார். 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தை பா.ஜ. அரசு அறிமுகப் படுத்தினால் அதனால் ஏற்படும் பின்விளைவுகளையும் பார்க்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை தடாலடியாக கலைப்பதற்கு இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? தமிழகத்தில் இரண்டரை ஆண்டு காலமாக திராவிட மாடல் நல்லாட்சி நடந்து கொண்டிருக்கிறது. இதை கலைத்துவிட முடியுமா? கேரளாவிலும், மேற்கு வங்கத்திலும் ஆட்சிகளை கலைத்து விட முடியுமா? இவ்வளவு ஏன், கர்நாடகாவில் பா.ஜ.வின் ஊழல் காரணமாக சமீபத்தில் அங்கு ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது.*

*கர்நாடகாவின் கைப்பிள்ளையாய் தவழும் காங்கிரஸ் ஆட்சியை கலைப்பதில் என்ன*


தினகரன்
செப்டம்பர் 4, 2023 திங்கட்கிழமை
தேவையற்ற தேர்தல்
நாடு முழுவதும் ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கான விவாதங்களை மீண்டும் ஒன்றிய பாஜ அரசு கிளப்பி விட்டுள்ளது. தேர்தலில் அளித்த வாக்குறுதிக்கேற்ப, நாடு முழுவதும் ஒரே சமயத்தில் லோக்சபா மற்றும் சட்டசபை தேர்தல்களை நடத்திட பாஜ அரசு முடிவு செய்து, அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது. பொதுவாக ஆளும்கட்சியானது அமைக்கும் குழுக்கள், அவர்கள் மனவோட்டத்தை சித்தரிக்கும் கைப்பாவையாகவே இருக்கும். இக்குழுவிலும் பெயரளவிற்கு காங்கிரஸ் எம்.பி. ஆதிர் ரஞ்சன் சவுத்ரியை நியமித்துவிட்டு, மற்றபடி தங்களுக்கு சாதகமான நபர்களை பாஜ நியமித்துள்ளது.

*நியாயம் இருக்கிறது? உண்மையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சொல்வது போல் ஒரே நாடு ஒரே தேர்தல் மூலம் ஒன்றிய அரசு ஒரு சதித் திட்டத்தை அரங்கேற்ற நினைக்கிறது. இதன் மூலம் ஒரே நாடு, ஒரே அதிபர் என கூறிக்கொண்டு, ஒட்டுமொத்த இந்தியாவையும் மோடி வாரி சுருட்ட நினைக்கிறார். இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசு குழு அமைத்திருப்பதை தமிழ்நாட்டில் அ.தி.மு.க. வரவேற்பதோடு, அதன் வாயெல்லாம் பல்லாக இருக்கிறது.*

*இச்சட்டம் நிறைவேறி விட்டால் தாமும் பலிகடா தான் என்கிற அச்ச உணர்வு அ.தி.மு.க.வுக்கு இருப்பதாக தெரியவில்லை. ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு ஒன்றிய அரசு சொல்கிற காரணங்களும் வாயால் வடை சுடுகிற கதை தான். அடிக்கடி தேர்தல் நடப்பதால் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சிக்கு தடை ஏற்படுகிறதாம். கடந்த 9 ஆண்டுகளாக பா.ஜ. ஆட்சியில் எப்படி பொருளாதாரம் இருந்தது, வளர்ச்சி எந்த லட்சணத்தில் இருந்தது என்பதை ஒரு நிமிடம் அவர்கள் எண்ணிப் பார்த்தாலே போதும். சர்வதிகாரம் எங்கெல்லாம் கோலோச்சுமோ, அங்கெல்லாம் ஒற்றை சொல்லுக்கே மதிப்பிருக்கும். இருவேறு கருத்துகளுக்கு இடமிருக்காது.*

*இவ்வாறு தலையங்கத்தில் 'தினகரன்' எச்சரித்துள்ளது.*



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (04.09.2023) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி பகுதியைச் சார்ந்த அஜித்குமார் (வயது 27) என்பவருக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டு நலமுடன் வீடு திரும்ப உள்ளார். அவரை அமைச்சர் நேரில் நலம் விசாரித்து, சிகிச்சை அளித்த மருத்துவக்குழுவினரை பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.விமலா, இருதய மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் பேராசிரியர்.மரு.மனோகரன், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையச் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன் மற்றும் மருத்துவக்குழுவினர் உடனிருந்தனர்.